பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கடர்10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 12 வெள்ளிக்கிழமை (28-07-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்245

# மல்லாகம் நோக்கி முன்னேறும் படையினரின் முயற்சி முறியடிப்பு!

## அகோர ஷெல் தாக்குதலால் மக்கள் பெருமளவு இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 28

அளவெட்டிப் பகுதியில் இருந்து நேற்றுக்காலை சுன்னாகம், மல்லாகம் பகுதிகளை நோக்கி முன்னேற முயன்ற படையினர் விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதலை அடுத்து இழப்புகளுடன் பின்வாங்கினர்.

படையினரின் துப்பாக்கிச் சூட்டின் போதும், ஷெல் தாக்குதலின் போதும் சிறுமி உட்பட இருவர் கொல்லப்பட்டனர். வீடுகள், வர்த்தக நிறுவனங்கள் பல ஷெல் வீச்சினால் சேதம் அடைந்தன. விடுதலைப் புலிகள் நடத்திய எதிர்த் தாக்குதலின் போது போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர்.

நேற்று அதிகாலை சுற்றுப் புறப்பகுதிகளை நோக்கி ஷெல், மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்களை தொடர்ச்சியாக மேற்கொண்ட படையினர் காலை 5.30 மணிக்கு முன்னேறும் முயற்சியில் ஈடுபட்டனர்.

ஷெல், துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டவாறு அளவெட்டி அழுக்கைப் பகுதியில் இருந்து நீவியம்பனை, ஊடாக, கல்லாரை ஐயனார் கோவிலடியையும்—

மல்லாகம் காளி கோயிலடி ஊடாக மல்லாகம் பிரதான வீதிப்பகுதியையும்— நோக்கி இரு அணிகளாக முன்னேற முயன்ற படையினரை விடுதலைப் புலிகள் தடுத்து மேலும் முன்னேற விடாது எதிர்த்தாக்குதலை தொடுத்தனர்.

சுமார் நான்கு மணித்தியாலங்கள் இருதரப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கெனத் இன்று நாடு கடத்தல்

கொழும்பு, ஜூலை 28

கைது செய்யப்பட்ட அமெரிக்க மத போதகரான கெனத் மல்டோன் இன்று நாடு கடத்தப்பட இருக்கிறார்.

இன்று அதிகாலை 1.55க்கு ஏயர்லங்கா விமானம் மூலம் நாடு கடத்தப்படும் இவர் சூரிச்சுக்கு முதலில் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்படுவார். (ஒ-3)

## சித்தாண்டியில் சிப்பாய் பலி

கொழும்பு, ஜூலை 28

சித்தாண்டியில் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற சண்டையில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். மூவர் காயமடைந்தனர்.

கஞ்சிகுடிச்சாறுப் பகுதியிலும் விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றுள்ளது. [ஒ-3]

## மாவீரருக்கு இன்று அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 28

மல்லாகம் பகுதி நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மணியரசனின் (தாமோதரம்பிள்ளை சுரேஷ்குமார் — யாழ்ப்பாணம்) வித்துடல் —

இன்று பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு மக்கள் இறுதிவணக்கத்துக்காக மாலை 4 மணிக்கு ஐந்துசந்தி கார்த்திகா பாலர் பாடசாலையில் வைக்கப்படும் பின் பூரண அணிவகுப்பு மரியாதையுடன் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் புனிதவிதை குழியில் வித்துடல் விதைக்கப்படும். [ஒ-3]

## வடக்கு நோக்கி படையணி

கொழும்பு, ஜூலை 28

யாழ். குடாநாட்டில் புதிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பிக்கும் வகையில் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வீடுகள், கட்டடங்கள் பெரும் சேதம்

சுன்னாகம், ஜூலை 28

அளவெட்டியில் இருந்து இராணுவம் முன்னேற முயன்ற போது மேற்கொண்ட ஷெல் தாக்குதல்களின்போது சுன்னாகம், கல்லாரை, சூராவத்தை, மயிலணி, மல்லாகம், ஏழாலைப் பகுதிகளில் இருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம் பெயர்ந்தனர். சுன்னாகம் பஸ் நிலையம், "மத்திய சந்தை, ஜெட் மோட்டோஸ் பகுதிகளை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அராலிக் கடலில் 4 மீனவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 28

அராலிப் பகுதி கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 4 மீனவர்களை படையினர் நேற்று நள்ளிரவு பிடித்துச் சென்றதுடன், அவர்களின் வள்ளத்தையும் எடுத்துச் சென்றுள்ளனர் எனத் தெரிய வந்தது.

இவர்களைவிடுதலை செய்ய உதவுமாறு அந்த மீனவர்களின் உறவினர்கள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவை கேட்டுள்ளனர். (ஒ-3)

## ஷெல் தாக்குதலின் போது சிறுமி தலை சிதறிப் பலி

### மற்றும் பலர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

அளவெட்டியில் இருந்து சுன்னாகம் நோக்கி முன்னேற முயன்ற இராணுவம் மேற்கொண்ட ஷெல் தாக்குதலின் போது மல்லாகம் ஐயனார் கோவிலடிப் பகுதியில் சிவலோகநாதன் குணாழினி [வயது 9] என்ற சிறுமி தலை சிதறி உயிரிழந்தார்.

மல்லாகம் பங்களா ஒழுங்கையில் விழுந்த ஷெல்லினால்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி. சீ. ஈ. பரீட்சை:

## வினாத்தாள்கள் நாளை கப்பலில் வந்து சேரும்?

யாழ்ப்பாணம், ஜூலை 28

எதிர்வரும் 31 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி. சீ. ஈ. [உயர்தரப்] பரீட்சைக்கான வினாத் தாள்களும், காகிதாதிகளும் இன்று காலை திருகோணமலைக்கு எடுத்து வரப்பட்டு கப்பலில் ஏற்றப்படும் என நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

நேற்று நண்பகல் பருத்தித் துறையில் இருந்து திருகோணமலைக்குப் புறப்பட்ட "ஹபரண" கப்பலில் இன்று அவை ஏற்றப்படும் என்றும்—

இரவில் பயணம் செய்ய இக்கப்பலுக்கு, கப்பல் கம்பனி அனுமதி அளிக்காத காரணத்தால் இக்கப்பல்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மீட்கப்பட்ட சடலம் ஒன்றில் சித்திரவதை அடையாளம்

அளவெட்டி, ஜூலை 28

அளவெட்டியில் இருந்து முன்னேற்ற முயற்சி மேற்கொண்ட படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான ஒருவரின் சடலம் நேற்று மாலை யாழ். போதனா வைத்தியசாலையில் உறவினர்களால் ஒப்படைக்கப்பட்டது.

மல்லாகம் தேவாலய வீதியைச் சேர்ந்த இராசையா [வயது 50] என்பவருடையதே இந்த சடலம் ஆகும்.

இரண்டு கண்களும் சிதைந்த நிலையில் தோண்டப்பட்டது போன்று இவரது சடலம் காணப்பட்டது.

இவரது கண்களை இராணுவம் தோண்டியிருக்கலாம் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

மேற்படி இறந்த நபரைத் தேடி அவரின் மருமகன் சென்றபோது வீட்டுக்கு அருகே உள்ள வைரவர் கோவிலுக்கு முன்பாக வீதியில் சடலம் "பெட்சீட்" ஒன்றினால் மூடியபடி கிடக்கக் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவரது உடலிலும் சித்திரவதை செய்யப்பட்டது போன்ற அடையாளங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. [இ-13-15]

## மாணவர் அனுமதி அட்டை ஞாயிறு வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 28

எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள ஜி. சீ. ஈ. [உயர்தரப்] பரீட்சைக்கான பாடசாலை பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள், எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலைகளில் வைத்து வழங்கப்படுமென்று யாழ். வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-4]

## 4 இளைஞரை படையினர் பிடித்துச் சென்றனர்

### ஒருவர் பல்கலைக்கழக மாணவன்

யாழ்ப்பாணம், ஜூலை 28

அளவெட்டிப்பகுதியில் இருந்து நேற்று முன்னேற முயன்ற இராணுவத்தினரின் பிடிக்குள் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் உட்பட நான்கு இளைஞர்கள் சிக்கி கொண்டனர்.

மல்லாகத்தில் நீண்ட காலமாக வசித்து வந்த சிங்கள குடும்பம் ஒன்றைச் சேர்ந்த சகோதரர்களான நிமலஸ்ரீ [வயது 30] சுசன் [வயது 28] சூட்டா [வயது 26]

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரமாக ஆயுத தளபாடங்கள் ஏற்றிவர கொழும்பில் இருந்து விமானம் பாக். விரைவு

கொழும்பு, ஜூலை 28
ஸ்ரீலங்கா படைகளுக்கு பீரங்கிக் குண்டுகள், மோட்டர் குண்டுகள் மற்றும் ஆயுத தளபாடங்களை அவசரமாக ஏற்றிவர நேற்று விசேட தாக்குதல் விமானம் ஒன்று பாகிஸ்தானுக்குச் சென்றுள்ளதாக வெரித்தாஸ் சிங்கள சேவையில் அறிவிக்கப்பட்டது.

வடபகுதி போருக்கு அவசரமாகத் தேவைப்படும் யுத்த தளபாடங்களை உடனடியாக பாகிஸ்தானில் இருந்து கொண்டுவந்து சேர்ப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு சகல நடவடிக்கைகளையும் எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று கொழும்பில் இருந்து விமானப்படையின் விசேட தாக்குதல் விமானம் பாகிஸ்தானுக்குப் புறப்பட்டுச் சென்றது என்றும், இந்த விமானம் முதலில் கராச்சிக்கும், பின்னர் அங்கிருந்து பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமபாத்துக்கும் செல்லும் என்றும் பாதுகாப்பு வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தானில் இருந்து எடுத்துவரப்படவுள்ள ஆயுத தளபாடங்களின் விவரங்கள் ஏதும் வெளியிடப்படவில்லை.

(ஒ-6)

## போரை குறுகிய காலத்தில் முடித்து மீண்டும் சமாதானம் ஏற்படுத்தப்படும்

### கேணல் ரத்வத்த கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 28
வடக்கு-கிழக்கு யுத்தத்தை குறுகிய காலத்தில் முடிவுக்கு கொண்டுவருவதன் மூலம் நாட்டில் மீண்டும் சமாதானம் நிலைநாட்டப்படும்.

இப்படிக் கூறினார் பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த.

கொழும்பில் நேற்று நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

வடக்கில் யுத்தம் நன்கு திட்டமிடப்பட்டு நடத்தப்படுகிறது.

எந்தவொருவரின் தேவைக்கோ, விருப்பு வெறுப்புக்கோ அமைய யுத்தம் நடத்தப்படமாட்டாது.

எதிரிக்கு இராணுவ தந்திரோபாயங்களை தெரியப்படுத்தாது நிதானத்துடன் யுத்தத்தை நடத்துவதே அரசின் நோக்கம்.

கண்டனங்களுக்கு பதிலடி கொடுக்கும் சிறந்தமுறை இதுவாகும் — என்றார்.

(ஒ-8)

## 'லங்காமுடித' கப்பலுக்கு செஞ். பாதுகாப்பு வாபஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 28
செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு செய்த முடிவை அடுத்து காங்கேசன்துறையில் தரித்துள்ள 'லங்கா முடித' கப்பலுக்கு வழங்கி வந்த பாதுகாப்பை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு வாபஸ் பெற்றுள்ளதாக தெரிய வந்தது.

கடந்த 16 ஆம் திகதி காங்கேசன் துறை வந்த இக்கப்பலை கடற்படையினர் அங்கு தடுத்துவைத்திருந்தபோதும், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரி அக்கப்பலில் தங்கி இருந்ததுடன், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு கொடியும் பறக்க விடப்பட்டிருந்தது.

கப்பலில் இருந்த பொருள்களில் ஒரு பகுதியை கடற்படையினர் பறித்த சம்பவத்தை அடுத்து செஞ்சிலுவை வழங்கிய பாதுகாப்பை வாபஸ் பெற்று விட்டதாகத் தெரிய வந்தது.

இக்கப்பல் தொடர்ந்தும் காங்கேசன்துறையில் தரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(ஒ-3)

## கொழும்பில் பரிசீலனை

யாழ்ப்பாணம், ஜூலை 28
வடக்கே வரும் கப்பலுக்கு பாதுகாப்பு வழங்கும் தமது நிலைப்பாட்டை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு வாபஸ் பெற்றுள்ளதால் உருவாகியுள்ள நிலைகுறித்து —

கொழும்பில் அரச உயர் மட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்தது.

வடக்கே வரும் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக செஞ்சிலுவைச் சங்கம், விடுதலைப் புலிகள், இலங்கை அரசு ஆகிய முத்தரப்புகளுக்கும் இடையில் தற்போதுள்ள உடன்படிக்கையை மீள்பரிசீலனை செய்ய வேண்டிய தேவை ஏற்படலாம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை நீக்குவதற்கு கொழும்பில் அரச உயர்மட்ட அதிகாரிகளுக்கும், செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெறுவதாகவும் தெரியவந்தது.

(அ-3)

## உணவு விநியோகம் தடைப்படும் நிலை

### செஞ்சிலுவைச் சங்கம் தகவல்

கொழும்பு, ஜூலை 28
வடக்குக்கான உணவு விநியோகம் இரு வாரங்கள் தொடர்ச்சியாக தடைப்பட்டால் வடபகுதி மக்கள் கடும் பாதிப்புக்குள்ளாவார்கள் என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு இலங்கை பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

கப்பல்களுக்கான பாதுகாப்பு நிறுத்தம் குறித்து கருத்து வெளியிடுகையில் அவர் மேற்கண்டவாறு ''வெரித்தாஸ்'' வானொலிக்கு தெரிவித்தார்.

(இ-6)

## பரதநாட்டிய அரங்கேற்றம்

### செல்வி சிவானுஜா ஸ்ரீரங்கநாதன்

(கொக்குவில் கலா பவன மாணவி)

10-07-95 இல் நடைபெற இருந்த மேற்படி அரங்கேற்றம் நாளை (**29-07-95**) சனிக்கிழமை மாலை **4-30** மணிக்கு, இளங்கலைஞர் மன்ற சுவா மண்டபத்தில் நடைபெறும். உறவினர்கள், நண்பர்கள், கலாரசிகர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

திரு ச. ஸ்ரீரங்கநாதன
[ஆசிரிய ஆலோசகர், வேலணை]
திருமதி ஸ்ரீ. ஸ்ரீரங்கநாதன்
[ஆசிரியை, யாழ். மத்திய கல்லூரி]
79, கிராம விஸ்தரிப்புத்திட்டம்
திருநெல்வேலி.

(37759)

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 28
கடந்த 20 ஆம் திகதியன்று மட்டக்களப்பு முறக்கொட்டாஞ் சேனைப் பகுதியில் இராணுவத்தினருடனான மோதலில் விழுப்புண் அடைந்திருந்த லெப்டினன்ட் சிங்கன் (சோமசுந்தரம் இன்பராசா— மட்டக்களப்பு) என்ற போராளி நேற்று வீரச்சாவு அடைந்தார்.

(ஒ-3

## வேளாண்போட்டி பரிசளிப்பு

கொழும்புத்துறை ஜூலை28
யாழ். பிரதேச செயலர் பிரிவின் வதிவிட வேளாண்மைப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு நிகழ்ச்சி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

[ஐ-30]

## கற்கைநெறி

யாழ்ப்பாணம், ஜூலை 28
யாழ். பல்கலைக்கழக புற நிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்று வந்த அலுவலக முகாமைத்துவம் தொகுதி 2, வானொலிப்பொறியியல் தொகுதி 2, இதழியல் தொகுதி 4 ஆகிய சகல கற்கை நெறிக்கான வகுப்புகளும் நாளை சனிக்கிழமை பி.ப 2 மணி முதல் ஆரம்பமாகி நடைபெறும். என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ)

## இன்ஸ்பெக்டர் சுடப்பட்டார்

கொழும்பு, ஜூலை 28
அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்றுக்கு தெற்கே திருக்கோவில் பகுதியில் ஆலயம் ஒன்றில் மதவைபவத்தில் கலந்து கொண்ட பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரை இனந் தெரியாதவர்கள் சுட்டனர் என்றும் —

காயமடைந்த அவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார் என்றும் — அறிவிக்கப்பட்டுள்ளது (ஓ-3)

## மண்டைதீவில் சிப்பாய் பலி

கொழும்பு, ஜூலை 28
மண்டைதீவில் குண்டு ஒன்று வெடித்ததால் சிப்பாய் ஒருவர் [illegible] என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. [ஓ-3]

## பொத்துவிலில் 10 தமிழர் கைது!

## பி.பி.ஸி. செய்தி கேட்க படையினர் தடை விதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28
பொத்துவில் இன்ஸ்பெக்டர் ஏற்றத்தில் ஒரு வயதுப் பிள்ளை உட்பட 10 தமிழர்களை இராணுவத்தினர் கைது செய்து முகாம் கொண்டு சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட இவர்கள் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை.

இவர்களில் பலர் செங்கல்வெட்டும் தொழிலாளர்கள்.

அப்பகுதியில் உள்ள மக்கள் பி. பி. ஸி, வெரித்தாஸ் செய்திகளைக் கேட்க படையினர் தடைவிதித்துள்ளனர். என்றும்—

இந்த எச்சரிக்கையை மீறுபவர்களுக்கு காதுக்குள் பேனாவை வைத்து உடைப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(ஒ 3)

## மட்டு. ரெலிகொம் நிறுவன கோபுரம் அருகில் குண்டு

கொழும்பு, ஜூலை, 28
மட்டக்களப்புநகரில் உள்ள தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தின் (ரெலிகொம்) கோபுரம் அருகில் இருந்து ஒன்றரை கிலோ எடையுள்ள குண்டு (கிளைமோர்) ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

இக்குண்டு வெடித்திருந்தால் மட்டக்களப்புக்கான தொலைத்தொடர்பு முழுஅளவில் சீர்குலைந்திருந்திருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

'ரெலிகொம்' ஊழியர்கள் கொடுத்த தகவலை அடுத்து இராணுவ பொறியியற் பிரிவினர் விரைந்து வந்து குண்டைச் செயலிழக்க வைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## தமிழர் புனர்வாழ்வு கழகம் நன்றி தெரிவித்து அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 28
ஸ்ரீலங்கா படையினர் அண்மையில் மேற்கொண்ட ''முன்னேறிப் பாய்தல்'' இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த லட்சக்கணக்கான மக்களை பராமரிப்பதில் தம்முடன் ஒருமித்திணைந்து சேவையாற்றிய சகல தரப்பினருக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நன்றி தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஏதிலிகளான மக்களை அரவணைத்துப் பராமரிக்கும் பாரிய பொறுப்பில் ஒத்துழைத்த அரச அதிபர், திட்டப் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், கிராமசேவை உத்தியோகத்தர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புகள், நலன் விரும்பிகள் ஆற்றிய நிறைவான பணிக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நன்றி தெரிவித்துள்ளது.

வலி-வடக்கு, வலி மேற்கு பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய், சாவகச்சேரி, பளை, மருதங்கேணி, உடுவில் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் 90க்கு மேற்பட்ட நலன்புரி நிலையங்களை புனர்வாழ்வுக் கழகம் அமைத்திருந்தது.

## கட்டுநாயக்கா சம்பவம் சந்தேக நபர் தப்பினார்

கொழும்பு, ஜூலை 28
அண்மையில், கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தின், சந்தேக நபர், தாண்டிக்குளத்தின் ஊடாக யாழ்ப்பாணம் சென்று விட்டதாக உயர்பொலீஸ் அதிகாரிஒருவர் தெரிவித்துள்ளார்.

இத் தகவலை ''திவயின'' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக கொழும்பினுள் ஊடுருவி உள்ள சந்தேக நபர்களின் பெயர் விவரங்களை வெளியிட முடியாத நிலை தோன்றியுள்ளது.

கட்டுநாயக்கா குண்டு வெடிப்பு தொடர்பான சந்தேக நபரின் விவரங்கள் பத்திரிகைகளில் வெளியானதால், அவர் உஷாராகி, தாண்டிக்குளத்தைக் கடந்த யாழ்ப்பாணம் சென்று விட்டார்.

தற்போது, ஜனாதிபதி மற்றும் பிரதம மந்திரி ஆகியோரைக் கொலை செய்வதற்காக, வெடி குண்டுகளுடன் தற்கொலைப் படையினர் கொழும்புக்கு வந்துள்ளனர்.

எனினும் அவர்கள் பற்றிய விவரங்கள் எதுவும் தகவல் தொடர்பு சாதனங்களுக்கு வெளியிடப்படமாட்டா.

அவர்கள் பற்றிய விவரங்கள் இரகசியமாக வைக்கப்பட்டு, அவர்கள் தங்கியிருக்காலாம் என நம்பப்படும் இடங்கள் படையினரின் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அந்த அதிகாரி மேலும் தெரிவித்ததாக ''திவயின'' தெரிவித்தது.

(எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பகவத்கீதை சொற்பொழிவு

யாழ்ப்பாணம் ஜூலை 28 சாவகச்சேரி- சந்திரபுரம் ஸ்ரீ சந்தவரோதயா கல்லூரியில், இன்று நண்பகல் 1-30 மணிக்கு, சுவாமி சித்ருபானந்தா நிகழ்த்தும் 'பகவத் கீதை'தொடர்சொற்பொழிவு இடம்பெறும். (எ)

# மற்றொரு படையெடுப்பை நடத்தும் நிர்ப்பந்த நிலையில் அரசு உள்ளது

## இளம்பரிதி தெரிவிப்பு

உலி. தெற்கு, ஜூலை 28 "இதுவரை அரசு மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையை விட இன்னும் ஒரு பாரிய அளவிலான படையெடுப்பை யாழ்ப்பாண மக்கள் மீது நடத்த வேண்டிய நிர்ப்பந்த நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. அரசின் எந்தவித தாக்குதல் நடவடிக்கையை எதிர்கொள்ளவும் — தமிழ் மக்களை பாதுகாத்து தமிழீழத்தை வென்றெடுக்கவும் நாம் தயாராகவே உள்ளோம்.''

யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி இவ்வாறு தெரிவித்தார்.

தெல்லிப்பளை - உடுவில் கல்விக்கோட்டங்களை சேர்ந்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மத்தியில் இன்றைய அரசியல் நிலைப்பாடுகளை எடுத்து விளக்கி, உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தெல்லிப்பளை பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. மகேந்திரன் தலைமையில் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக் கலந்துரையாடலின் போது திரு. இளம்பரிதி மேலும் கூறியதாவது:

முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட இடங்களில் இருந்து இராணுவம் விரட்டியடிக்கப்பட்ட செய்தி சிங்கள மக்களுக்கு தெரியத் தொடங்கிவிட்டது.

ஸ்ரீலங்கா இராணுவத்தினதும் அரசினதும் பொய்ப்பிரசாரங்களும், தமிழின அழிப்பு நடவடிக்கைகளும், மனித உரிமை மீறல் நடவடிக்கைகளும் சர்வதேச அரங்கில் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

தனது தோல்விகளை மூடி மறைக்கவும்—

பொய்ப்பிரசாரங்களை நிலைநிறுத்தவும்—

அரசியலில் தாம் தொடர்ந்து பதவிவகிக்கவும்— யாழ்ப்பாண மக்கள் மீது மீண்டுமொரு பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள அரசு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

புலிப்பாய்ச்சல் நடவடிக்கையின் மூலம் எதிரி இன்று பலவீனப்பட்டுள்ளான். பலவீனப்பட்டுள்ள எதிரியை மேலும் பலவீனப்படுத்துவதன் மூலம் எமது வெற்றியை விதிரப்படுத்த முடியும்.

எமது வெற்றியை நிர்ணயிப்பவை ஆட்பலம், மனோபலம், பொருளாதாரபலம் என்பனவேயாகும்.

போராட்டத்தை வெல்வதற்கான வாய்ப்பு இது சர்வதேசத்தின் பார்வையும் இன்று எம்பக்கமே உண்டு. நாம் இராணுவ நிலையில் பலமாக உள்ளோம். இராணுவ வெற்றியை ஏற்படுத்துவதன்மூலம் ஒரு பரிணாமமுள்ள அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தி அதன்மூலம் எமது இலக்கை அடைவோம்— என்றார். (ஐ-152)

### பட்டப் பின் கல்வித் தகைமை கற்கை நெறிக்கான அனுமதிப் பரீட்சை 1994 | 95

பட்டப் பின் கல்வித் தகைமை கற்கை நெறிக்கான அனுமதிப் பரீட்சை 1995 - 08 – 10ஆம் திகதி இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும். இப் பரீட்சைக்கான அனுமதி அட்டையை பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் ஆகஸ்ட் மாதம் 4ஆம், 5ஆம் திகதிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

— பதிவாளர்.

பரீட்சைக் கிளை,
யாழ். பல்கலைக்கழகம்.
(சி-1952)

### நல்லூர் உற்சவ தொண்டர்சேவை கூட்டம்

கொழும்புத்துறை ஜூலை28 நல்லூர் உற்சவ காலத்தில் தொண்டர் சேவை தொடர்பான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் பிற்பகல் 4-30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும். (ஐ-30)

### யோகாசன கருத்தரங்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28 நல்லூர் திவ்விய ஜீவன சங்கத்தில் நாளை மறுதினம் பிற்பகல் நடைபெறவிருந்த யோகாசன கருத்தரங்கு தற்போதைய சூழ்நிலை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### ஆலயங்களின் சேத விவரம் சேகரிப்பு

வலிகாமம் தெற்கு ஜூலை 28 ''முன்னேறிப் பாய்தல்'' இராணுவ நடவடிக்கையின் போது ஷெல் மற்றும் ''புக்காரா'' தாக்குதல்களினால் பாதிக்கப்பட்ட இந்துக் கோவில்கள், இந்து மதகுருமார்கள், தொண்டர்கள் மற்றும் அறங்காவலர்கள் தொடர்பான முழுமையான விவரங்களை யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையினர் தற்போது சேகரித்து வருகின்றனர்.

விவரங்களை 135, பழைய பருத்தித்துறை வீதி, நல்லூரில் உள்ள யாழ்ப்பாண மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைமைச் செயலகத்துக்கு எழுத்து மூலமாக அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ஐ-152)

### 31ஆம் நாள் நினைவலைகள்



**செல்வி ரமணி புஸ்பராசா**
(யா/இராமநாதன் கல்லூரி பழைய மாணவி)

அன்னையின் அரவணைப்பில் 18 – 04 – 1974 | ஆண்டவன் சந்நிதியில் 28 – 06 – 1995

பண்பின் பிறப்பிடமாய்-பாசத்தின் உறைவிடமாய்,
பரணியில் பதிந்து நின்ற எம் பாசமலர் ரமணியே!
பார்போற்றி பல்லாண்டு வாழாது —
பாதியில் மறிப்பதற்கு பழி என்ன நாம் செய்தோம்
சொல்லாது சென்றாயே ......
சோகத்தால் வாடிடவோ ......
காலமெல்லாம் கலங்குவதற்கு
காலன் செய்த விளைவிதுவோ!
கலங்கியே அழுகின்றோம்
கவலையோ ஆறாது.

ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.
(37753)

# 40 அரச கம்பனிகளை விற்று போருக்கு நிதி திரட்ட முயற்சி

## வாங்குவதற்கு முதலீட்டாளர்கள் பின்னடிப்பு

கொழும்பு, ஜூலை 28 அதிகரித்துச் செல்லும் யுத்தச் செலவுகளைச் சமாளிக்க அரசுக்குச் சொந்தமான 40 கம்பனிகளை விற்று அதன் மூலம் நிதி திரட்ட அரசு எடுத்த முயற்சி தோல்வியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இந்த 40 கம்பனிகளையும் விற்றுவிட அரசு முயற்சித்தது.

ஆனால் கம்பனிகளை வாங்க வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பின்னடித்ததைத் தொடர்ந்து அரசின் திட்டம் தோல்வி கண்டுள்ளது.

எல்லாளன் படையின் அச்சுறுத்தல் மற்றும் ஸ்திரமற்ற பாதுகாப்பு நிலை போன்ற காரணங்களால் கொழும்பில் தங்கள் முதலீடுகளைச் செய்ய வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பின் நிற்பதால் அரசுக்கு இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இக் கம்பனிகளை விற்பதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட இலங்கை வங்கித் தலைவர் திரு. ராஜன் ஆசீர்வாதம் தலைமையிலான குழுவினர் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் தொடர்ந்து அது தொடர்பாகப் பேச்சு நடத்தி வருவதாக அறிய வருகிறது. (எ-3)

### டிப்ளோமா மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 28 தேசிய கல்வி நிறுவக பட்டப்பின் கல்வி டிப்ளோமா யாழ். இந்து மகளிர் கல்லூரி நிலைய இரண்டாம் வருட மாணவர்களை எதிர்வரும் 30 ஆம் திகதி இந்து மகளிர் கல்லூரியில் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கடந்த 29 ஆம் திகதி பதிவுகளை மேற்கொள்ளத் தவறிய ஆசிரிய மாணவர்களை நாளை சனிக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் சமுகமளிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### பட்டம் வழங்கி கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28 வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. கி. துரைசுவாமிக்கும், ஓய்வு பெற்ற ஆசிரியர்களான திரு. ச. வேலுப்பிள்ளை, திரு. கி. வைரமுத்து ஆகியோருக்கும் அண்மையில் பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கி பட்டமளித்து கௌரவிக்கப்பட்டது. [ஐ]


அருள்மிகு ஸ்ரீபழனி ஆண்டவர் ஆலயத்தின் 4 ஆவது ஸ்ரீ பழனி வேல் பவனியை

முன்னிட்டு நடத்தப்படும்

**சிறப்புப் போட்டிகளின்**

சமய அறிவு, கவிதைப் போட்டிகள் எதிர்வரும் 30 - 07 - 1995 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-30மணியளவில் சாவகச்சேரி நகரசபை சபா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

— பரிபாலனசபை

டச் வீதி.
சாவகச்சேரி.
(சி-1955)



**இலவச மருத்துவ முகாம்**
**30-7-95 ஞாயிறு**

இடம்: குடத்தனை அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை
நேரம்: காலை 8-00 மணி தொடக்கம் 11-00 மணி வரை
நடத்துபவர்: டாக்டர் எம். யோகசந்திரதேவன்

காலை 11-00 மணி தொடக்கம் மதியம் 12-00 மணி வரை குடத்தனை தென்னிந்திய திருச்சபை சிறுவர் பாடசாலை மாணவர்களுக்கு ம...டும் பாடசாலை சிறார்களுக்கு முன்னுரிமை

— செயலாளர்

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.
24-7-95
[37747]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லின இறைச்சி சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. S. வெலிலி, உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன், மல்வம் வீதியூடாக, சிங்கம் வீதி, உடுவில். [37751]

தமிழ் தட்டச்சு இயந்திரம் [New Key Board] விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்:- Office Equipment Technical Centre (O.E.T.C.) இல. 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் [மனோகரா சந்திக்கு அருகில்]. (37756)

### SPOKEN ENGLISH

Spoken English With Grammar ஆரம்பம்: 1-8-95 செவ்வாய். V.N. Kandasamy, A.I.B. Part-I [London] Inter [London] Dip-in-English இல. 87, திருநெல்வேலி றோட் (றயில் கடவைக்குச் சமீபமாக), கொக்குவில். (37757)

### புலமைப் பரிசில் பரீட்சை

புதிய பாடத்திட்டத்திற்குரிய வழிகாட்டி "பொது விவேகம்" 97/- வினாத்தாள் I, IIற்குரியது. வெளியீடு: அகிரன் பதிப்பகம். எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். 18% கழிவுடன் மொத்தமாகப் பெற யாழ்ப்பாணப் புத்தக நிலையம், 448, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். (சி-1717)

### வெற்றிக்கனி

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் வெற்றிக்கனி பகுதி I, II ஆக்கம்: பொன். சத்திவேல். Bright இன் வெளியீடு. விலை ரூபா 60/-. விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-1953)

### SPECIAL ANTENNA

To view Rupavhaini, Madras Programmes Fixing Special T.V. Antenna, Repairing Antennas, Radios-T.V. Decks, Clocks and Watches. Venus Dilka Watch and Radio Works, 284, Stanley Road (Ariyakulam Junction), Jaffna. Branch: KandyRoad, Chavakachcheri. (C-1686)

---

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

## 16ஆம் நாள்
## வீட்டுக்கிருத்திய அழைப்பு

அராலி கிழக்கைச் சேர்ந்த

**திருமதி**
**வள்ளியம்மை சின்னத்தம்பி**
**ஆச்சாரியார்**

13-07-1995 வியாழன் தச்சன் தோப்பில் சிவபதம் எய்திய எமது அன்புத்தாயாரின் 16 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (28-07-1995) வெள்ளிக்கிழமை இறுதிக் கிரியைகள் நடைபெற்ற இல்லத்தில் நடைபெறும். உறவினர்கள், நண்பர்கள் இக் கிரியைகளில் கலந்து அன்று நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மகன்மார்: சி. கணபதிப்பிள்ளை (ஆசிரியர் யா. இ. கல்லூரி),
சி. அமரசிங்கம் [ஸ்தபதியார்],
சி. கனேசலிங்கம்.

தச்சன்தோப்பு,
நாவற்குழி. [37744]

---

வெளிவந்து விட்டது!

## அறிவுக் களஞ்சியம்-33

விலை ரூபா 10/- மட்டுமே [சி-1950]

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 10 — 08 — 1950

உதிர்வு: 10 — 08 — 1991

**திருமதி**
**அருளானந்தம் இந்திராதேவி**
திதி: 28 — 07 — 1995

பண்பையும் பாசத்தையும் பாலோடு தந்தவளே - அம்மா
வாழ்வூட்டி வழிகாட்டி பூரித்து நின்றவளே அம்மா
தோள ஏற்றி சுவையூட்டி எம் உயிரோடும் - இணைந்தவளே அம்மா
நான் ஓடி மறந்தாலும் உந்தன் நினைவுகள் - என்றும் எம்மோடு சங்கமமே.

அன்னாரின் பிரிவால் துயருறும்;
கணவன், பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.

இராஜ வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (37720)

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**பொன்னுத்துரை பரமானந்தன்**
(ஓய்வுபெற்ற உதவிப் பொலீஸ் இன்ஸ்பெக்டர்]

அன்னைமடியில்: 25-02-1937
ஆண்டவன் பிடியில்: 10-08-1991

திதி: 28 - 07 - 1995

எம்மையெல்லாம் வழிகாட்டி வாழவைத்த
எங்கள் அன்புத் தெய்வமே!
குடும்ப ஒளிவிளக்காய் திகழ்ந்து
எங்கள் மேன்மைக்காய் உழைத்தீர்கள்.
உங்கள் உயர்வுகள் தான் எத்தனை?
நீங்காத உங்கள் நினைவால்
இதயங்கள் வாடுதப்பா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
தினமும் பிரார்த்திக்கும்;
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

"ஆனந்த அகம்"
ஊரெழு வடக்கு,
சுன்னாகம். (37741)

---


தமிழீழ வைப்பகம்

BANK OF TAMILEELAM

"இணைந்திடுவீர் எம்முடன்
வளர்த்திடுவோம் வளமுடன்"

* சேட்டத்தை ஊக்குவிக்கவும்
* வருவாயைப் பெருக்கவும்

நல்லூர் திருவிழாக் காலத்தில்
தமிழீழ வைப்பகம் வழங்க இருக்கும்

:: ஓர் அரிய வாய்ப்பு ::

கூடுதல் வட்டி வீதத்திற்கும் பூரண காப்பிற்கும்
தமிழீழத்தில் தனித்துவம் பேணுவது
தமிழீழ வைப்பகம் ஒன்றுதான்.

நிலையான வைப்பிற்கான இந்தச் சலுகை வட்டி 20%த்தையும்,
சேட்டக் கணக்கைத் தொடங்கி பரிசு பெறும் தகுதியையும்
நல்லூர் திருவிழாக்காலத்தில் தமிழீழ வைப்பக சிறப்பு பணியகத்தில்
கணக்குகளை தொடங்குபவர்கள் மட்டும் பெறமுடியும்.

தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

தமிழீழ வைப்பகம்,
லெப். கேணல் ராதா சாலை,
யாழ்ப்பாணம்.

[சி-1951]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## அரசும் செஞ்சிலுவையும்

ஸ்ரீலங்கா இராணுவத்தின் படைத்தளமாக காங்கேசன் துறை விளங்குவதால், அங்கு பொருள்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களுக்குத் தம்மால் பாதுகாப்பு வழங்க முடியாது என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அறிவித்திருக்கிறது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அரசியல் சார்பற்ற, மனித நேயத் தொண்டர் நிறுவனமாகும். போர் நடைபெறும் இடங்களில் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களையும், போர்க் கைதிகளின் நலன்களையும் நடுவு நிலைமை நின்று கவனிப்பதே அதன் பிரதான கடமை.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் செஞ்சிலுவை அலுவலகம் எப்போதும் தனது கொள்கை, கோட்பாடு, நெறிமுறைகளை மீறாமலே செயற்படுகின்றது.

1990ஆம் ஆண்டு ஈழப் போர் இரண்டு ஆரம்பித்த காலத்திலிருந்தே தெற்கில் உள்ள சிங்களத் தீவிரவாதிகளும், அரசாங்கத்தினரும், பத்திரிகைகளும், செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவை சந்தேகக் கண்ணுடனேயே பார்க்கிறார்கள். செஞ்சிலுவைக் குழுவை நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்றும் அடிக்கடி கோஷம் எழுப்பி வருகிறார்கள். நவாலி தேவாலயக் குண்டு வீச்சு விவகாரமும் அப்படி ஒரு "புயலை"க் கிளப்பியது.

முத்தரப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டே செஞ்சிலுவை வடக்கில் தனது மனித நேயப் பணிகளை ஆற்றுகிறது. இத்தகைய ஒப்பந்தங்களை செஞ்சிலுவையும், விடுதலைப் புலிகளும் மீறியதாகப் பதிவில்லை. அரசாங்கமே — படை தரப்பே ஒப்பந்தங்களை மனம் போன போக்கில் பல தடவைகள் மீறியுள்ளது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு யாழ்ப்பாணத்தில் இயங்குவதால் —

இங்கே நடத்தப்படும் அரச பயங்கரவாதத்துக்கு விரும்பியோ விரும்பாமலோ செஞ்சிலுவை சர்வதேசம் துக்குச் சாட்சியாகி விடுகிறது — என்பதாலேயே அதனை வெளியேற்றிவிட வேண்டும் என்று கோஷங்கள் எழுப்பப்படுகின்றன.

குற்றம் உள்ள நெஞ்சு தான் குறுகுறுக்கும். எனவே செஞ்சிலுவைச் சங்கம் மனப் பயம் கொள்ளப் போவதில்லை. அது தனது பணியை நேர்மையுடனும் பக்கச்சார்பின்றியும் ஆற்றுவதால் அதனை வெளியேற்றுவது என்பது அவ்வளவு இலகுவானதல்ல. செஞ்சிலுவையின் ஜெனிவா சாசனத்தில் ஸ்ரீலங்காவும் கைச்சாத்திட்டுள்ளது என்பதனையும் மறந்துவிடலாகாது.

உணவுப் பொருள்களைக் கொண்டுவரும் பணியை செஞ்சிலுவை முற்றாகவே நிறுத்துமானால், அரசாங்கம் அதனை வாய்ப்பாகக் கருதி தமிழர்களைப் பட்டினி போட முனையலாம். இது செஞ்சிலுவைக்குத் தெரியாததல்ல.

யாழ். குடாநாட்டுக்கு கப்பல் மூலம் பொருள்களைக் கொண்டு வருவதானால் அது சம்பந்தமாக புதிதாக ஒரு முத்தரப்பு ஒப்பந்தம் உருவாக வேண்டும். அதற்கான விட்டுக்கொடுப்பு படை தரப்பிலிருந்து வருமா?

எது, எப்படியோ செஞ்சிலுவைக் குழுவை ஆபத்தில் உதவும் இரட்சகராக தமிழர் கருதக்கூடாது.

கடற்படையின் கெடுபிடி காரணமாக

# குடாநாட்டுக்கான கடிதத் தொடர்பு இரண்டரை மாத காலமாக இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ். குடாநாட்டுக்கு கடந்த சுமார் இரண்டரை மாத காலமாக வெளியூர் கடிதத் தொடர்புகள் ஏதும் இல்லை.

கடந்த மே மாதம் 12 ஆம் திகதி கோமாரி கப்பலில் எடுத்துவரப்பட்ட 473 தபால் பொதிகளுக்குப்பின் இதுவரை பருத்தித்துறைக்கு எதுவித தபால் பொதிகளும் எடுத்து வரப்படவில்லை என்று யாழ். பிரதம தபாலக வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

இதனால் யாழ். குடாநாட்டு மக்கள் வெளிநாட்டுக் கடிதத் தொடர்புகள் எதுவுமின்றி தமது உறவினர்கள், நண்பர்களின் சுக, துக்கங்களை அறியமுடியாது கவலையுற்றிருக்கின்றனர்.

தற்போது கொழும்பு தபால் தரம் பிரிக்கும் நிலையத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வடபகுதிக்கான தபால் பொதிகள் தேங்கிக் கிடப்பதாகத் தெரிய வருகிறது.

வடபகுதித் தபால்கள் ஒவ்வொன்றும் பரிசோதனை செய்யப்படவேண்டுமென்ற கடற்படையினரின் கெடுபிடியை அடுத்தே அங்கு தபால் பொதிகள் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

படையினரால் இதுவரை 100 தபால் பொதிகள் வரையுமே பரிசோதனை செய்யப்பட்டுள்ளதாகவும் இத் தபால் பொதிகளை எடுத்து வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவென பதில் வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. ச. சடாட்சரநாதன் கொழும்பு சென்றுள்ளதாகவும் வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகத்தின் சிரேஷ்ட நிர்வாகச் செயலாளர் தெரிவித்தார். (ஓ-4)

செஞ்சிலுவைச் சங்க

## நிவாரண உதவி தொடர்ந்து கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 28

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கி வரும் நிவாரண உதவிகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் செயலாளர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் தெரிவித்தார்.

இராணுவ நடவடிக்கையால் கொல்லப்பட்டோரின் குடும்பத்தினருக்கும், 50 வீத காயங்களினால் பாதிக்கப்பட்டோருக்கும், 6 மாத கால நிவாரணமும் —

இராணுவத்தால் பிடித்துச் செல்லப்பட்டோரின் குடும்பங்களுக்கு அவர் திரும்பி வரும்வரை 6 மாத கால நிவாரணமும் —

சாதாரண காயமடைந்தோருக்கு ஒரு மாத கால நிவாரணமும் — இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையால் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அவசரப் பிரிவுத் தலைவர் மூலமாக வழங்கப்படும் இந்நிவாரணத்தை பெற்றுக் கொள்ள விரும்புவோர் சம்பவங்களை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் பிரிவுச் செயலகங்களில் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-4)

## சுழிபுரம்வாசிகள்

நவாலி சென். பீற்றர்ஸ் ஆலயத்தின் மீதான விமானத் தாக்குதலில் சுழிபுரம் மேற்கு ஐயனார் கோயில் பகுதியைச் சேர்ந்த 13பேர் இறந்துள்ளதாகத் தெரிய வருகின்றது. இவர்கள் இராணுவத் தாக்குதலிலிருந்து தப்புவதற்காக மேற்படி ஆலயத்திற்குச் சென்று தங்கியவர்கள் ஆவர். (க-28)

## மக்கள் வங்கி சுன்னாகம் கிளை சேதம்

வலிகாமம்தெற்கு, ஜூலை 28

அண்மைக்கால இராணுவ நடவடிக்கையின் போது, இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களினால், சுன்னாகம் மக்கள் வங்கி கிளை சேதமடைந்துள்ளது.

அதே சமயம் இத்தாக்குதலில் இப்பகுதியில் அமைந்துள்ள பல வீடுகளும் சேதமுற்றன. [எ-185]

## மகஜர்

கொழும்புத்துறை, ஜூலை 28

திருமலை அருள்மிகு ஸ்ரீ கோணேசர் ஆலயம் முன்பாகச் ஸ்ரீலங்கா அரசு பௌத்த விகாரை ஒன்றை அமைக்க எடுத்துள்ள முயற்சியை வெகுவாகக் கண்டித்து யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையும், யாழ் பண்டத்தரிப்பு இந்து வாலிபர் சங்கமும் ஸ்ரீலங்கா ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது.

## துர்நாற்றம்

வடமராட்சி, ஜூலை 28

தென்புலோலி ஆனை விழுந்தான் மயான சுற்றாடலில் துர்நாற்றம் வீசுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இறைச்சிக்காக வெட்டப்படும் ஆடு, மாடுகளின் கழிவுகள் மயான வளவில் கொட்டப்படுவதாலேயே இவ்வாறு அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது. [எ-173]

## கூட்டுறவு சங்கங்கள் பதிவு

யாழ்ப்பாணம், ஜூலை 28

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பகுதியிலுள்ள புளியங்குளம், நெடுங்கேணி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், வடமாகாண பனை தென்னைவள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, மன்னார் மாவட்டத்திலுள்ள 3பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்களையும் பதிவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாக வடமாகாண பனைதென்னை வள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு தி. சபாரத்தினம் தெரிவித்தார். [க-4]

## ப. நோ. கூ. ச. கிளைகள்

வலிகாமம் தெற்கு, ஜூலை 28

"முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கைகள் காரணமாக மக்கள் முற்றாக இடம் பெயர்ந்துள்ளதால், சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவு சங்கத்துக்குட்பட்ட 4 ஆம் கிளை (கந்தரோடை), 6ஆம் கிளை (சங்குவேலி) ஆகியவை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகவும் —

இவற்றை முறையே 3ஆம் கிளை (சுன்னாகம் மேற்கு), 7ஆம் கிளை (உடுவில் மத்தி) ஆகியவற்றுடன் தற்காலிகமாக இணைத்து செயற்பட வைத்துள்ளதாகவும் —

சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் திரு. எஸ். சிவலிங்கம் தெரிவித்துள்ளார். [க-152]

## ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சை நேர அட்டவணை

யாழ்ப்பாண மாவட்டம் உட்பட இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் எதிர்வரும் திங்கட்கிழமை (31 ஆம் திகதி) தொடக்கம் ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சை திட்டமிட்டபடி நடைபெற உள்ளது.

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையால் இப்பரீட்சை இங்கு நடைபெறும் என்பது இரண்டொரு தினங்களுக்கு முன்னரே உறுதி செய்யப்பட்டது.

எனினும் பல பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை நேர அட்டவணை இன்னும் கிடைக்கவில்லை.

இம் மாதம் 9 ஆம் திகதிய உதயனில் நேர அட்டவணையைப் பிரசுரித்திருந்தோம்.

அன்றைய தினமே இராணுவ நடவடிக்கை ஆரம்பமானதால் நாம் அட்டவணையை உன்னிப்பாக கவனத்தில் கொள்ளவில்லை என்றும் —

நேர அட்டவணையை மீண்டும் பிரசுரிக்கும்படியும் பரீட்சார்த்திகள் பலரும் கேட்டுக்கொண்டதற்கு இணங்க — அதனைமீண்டும் இங்கு பிரசுரிக்கிறோம்.

| திகதி | மு. ப. | | | பி. ப. | | |
|---|---|---|---|---|---|---|
| 31-07-95 | 8-30 | விலங்கியல் | 1 | 12-30 | சரித்திரம் | 1 |
| | | பிரயோககணிதம் | 1 | | | |
| | | சரித்திரம் | 11 | | | |
| 01-08-95 | 8-30 | பிரயோககணிதம் | 11 | 12-30 | மனைப்பொருளியல் | 1 |
| | | விலங்கியல் | 11 | | | |
| | | சித்திரம் | 1 | | | |
| 02-08-95 | 8-30 | தூயகணிதம் | 1 | 12-30 | மனைப்பொருளியல் | 11 |
| 03-08-95 | 8-30 | தாவரவியல் | 1 | 12-30 | தூயகணிதம் | 11 |
| | | தமிழ் | 1 | | | |
| 04-08-95 | 8-30 | தாவரவியல் | 11 | 01-30 | சங்கீதம் - கர்நாடகம் | 1 |
| | | தமிழ் | 11 | | சங்கீதம் - மேலைத்தேய | 1 |
| 05-08-95 | 8-30 | இரசாயனவியல் | 1 | 12-30 | நாட்டியம் - பரதம் | 1 |
| | | பொருளியல் | 1 | | | |
| 07-08-95 | 8-30 | இரசாயனவியல் | 11 | 12-30 | சங்கீதம் - கர்நாடகம் | 11 |
| | | நாட்டியம் பரதம் | 11 | | சங்கீதம் - மேலைத்தேய | 11 |
| 08-08-95 | 8-30 | பௌதிகவியல் | 1 | 12-30 | | |
| | | கணக்கியல் | 1 | | | |
| 09-08-95 | 8-30 | பௌதிகவியல் | 11 | 12-30 | விவசாயவிஞ்ஞானவியல் | 1 |
| | | கணக்கியல் | 11 | | | |
| 11-08-95 | 8-30 | பொருளியல் | 11 | 01-30 | விவசாயவிஞ்ஞானவியல் | 11 |
| 12-08-95 | 8-30 | சித்திரம் | 11 | 12-30 | இந்துசமயம் | 1 |
| | | ஆங்கிலம் | 1 | | கிறிஸ்தவம் | 1 |
| | | | | | சமஸ்கிருதம் | 1 |
| 14-08-95 | 8-30 | | | 12-30 | இந்துசமயம் | 11 |
| | | | | | கிறிஸ்தவம் | 11 |
| | | | | | சமஸ்கிருதம் | 11 |
| 15-08-95 | 8-30 | அரசியல் மூலதத்துவங்கள் | 1 | 12-30 | வர்த்தகமும் நிதியும் | 1 |
| 16-08-95 | 8-30 | புவியியல் | 1 | 12-30 | அளவையியலும் விஞ்ஞான முறையும் | 1 |
| 17-08-95 | 8-30 | புவியியல் | 11 | 12-30 | இந்துநாகரிகம் | 1 |
| 18-08-95 | 8-30 | புவியியல் | 111 | 01-30 | இந்துநாகரிகம் | 11 |
| 19-08-95 | 8-30 | சித்திரம் | 111 | 12-30 | வர்த்தகமும் நிதியும் | 11 |
| | | ஆங்கிலம் | 11 | | | |
| 21-08-95 | 8-30 | அரசியல் மூலதத்துவங்கள் | 11 | 12-30 | நாடகமும் அரங்கியலும் (தமிழ்) | 1 |
| | | | | | நாடகமும் அரங்கியலும் [ஆங்கிலம்] | 1 |
| 22-08-95 | 8-30 | நாடகமும் அரங்கியலும் [த] | 11 | 12-30 | அளவை. விஞ்ஞான முறை | 11 |
| | | நாடகமும் அரங்கியலும் (ஆங்) | 11 | | | |
| 23-08-95 | 8-30 | நாடகமும் அரங்கியலும் (த) | 111 | 12-30 | | |
| | | நாடகமும் அரங்கியலும்[ஆங்] | 111 | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வுத்திட்டம் விவாதிக்கப்பட்டாலும் செயற்படுத்தபுலிகள் ஒப்புதல்தேவை

## பி.பி.ஸி. கருத்து

லண்டன், ஜூலை 28
இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் பற்றி விவாதிக்கப்பட்டாலும் விடுதலைப் புலிகளின் ஒப்புதல் இன்றி அது செயற்படுத்த முடியாது என்று பி. பி. ஸி கருத்து வெளியிட்டது.

விடுதலைப் புலிகள் ஏற்கனவே யாழ்ப்பாணத்தை நிர்வாகம் செய்து வருகிறார்கள். அவர்கள் நிச்சயமாக இத்திட்டத்தை எதிர்ப்பார்கள்; ஏற்கமறுப்பார்கள்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்கும் அதே வேளையில் ஓரளவு அதிகாரப் பகிர்வுக்கு இது வழிசெய்யும்.

ஆனால் நாடாளுமன்ற தமிழ்க் கட்சிகளும் இவ்விடயத்தில் பிளவுபட்டு நிற்கின்றன.

விடுதலைப் புலிகளை இராணுவம் தோற்கடிப்பதைப் பொறுத்தே எந்தத் தீர்வும் அமையும்.

யாழ்ப்பாணத்தில் இராணுவம் அண்மையில் மேற்கொண்ட நடவடிக்கைக்கு பின்னரும் புலிகளைத் தோற்கடிப்பது என்பதற்கு வாய்ப்பு இல்லை.

ஏராளமான செலவைக் கொடுக்கும் போரை நிறுத்த வேண்டும் என்று அரசு மீது கொடுக்கப்படும் அழுத்தம் இந்த தீர்வுத்திட்டம் இப்போதாவது வெளியிட வேண்டும் என்ற நிலைக்கு அரசை தள்ளியுள்ளது.

போர் முடிவைப் பொறுத்தே இத்திட்டங்கள் ஏற்கப்படுவதும், செயற்படுத்தப்படுவதும் அமையும் என்று பரவலாக கருதப்படுகிறது— இவ்வாறு பி. பி. ஸி மேலும் தெரிவித்தது. [ஒ-3]

## வவுனியாவில் ராணுவ கப்டன் கைதானார்

வவுனியாவிலுள்ள செக்கடிப்புலவு என்ற இடத்தில் தமிழ்ப் பெண் ஒருவர் மீது பாலியல் வன்முறையில் ஈடுபட முனைந்த இராணுவக் கப்டன்கள் இருவரில் ஒருவர் இராணுவப் பொலீசாரால் கடந்த 23 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் தொடர்புடைய மற்றைய கப்டனைக் கைதுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக "திவயின" பத்திரிகை தெரிவித்துள்ளது.

## 4 இளைஞரை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோரும் யாழ். பல்கலைக்கழக பொறியியல் மாணவனான மல்லாகத்தைச்சேர்ந்த இராசையா சுரேஷ்குமார் (வயது 22) என்பவருமே இந்த நால்வரும் ஆவர்.

இந்த நால்வரையும் படையினர் தம்முடன் கொண்டு சென்றனர்.

சிங்களக் குடும்பத்தைப் பிடித்தபோது, அம்மூவரின் தாயாரையும் வரும்படி இராணுவம் அழைத்ததாகவும் அவர் செல்ல மறுத்ததை அடுத்தே நீண்ட நேரவாக்குவாதத்தின் பின் அவரது பிள்ளைகளை பிடித்துச் சென்றதாகவும் விடுவிக்கப்பட்ட சிலரால் தெரிவிக்கப்பட்டது. (இ 15)

## ஷெல் தாக்குதலின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தர்மலிங்கம் கஸ்தூரி [வயது 47] —

சுன்னாகம் சூராவத்தையில் விழுந்த ஷெல்லினால் ஆர். மார்க்கண்டு [வயது 64] ஆகியோர் படுகாயமடைந்தனர்.

சுன்னாகம் கிழக்கில் கிருஷ்ணபிள்ளை பாஸ்கரன் [வயது 30] என்பவரும் காயம் அடைந்துள்ளார்.

இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மகாலிங்கம் யாழினி [வயது 9] என்பவர் சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பி உள்ளார்.

காயம் அடைந்த மற்றும் சிலர் வேறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். [இ-13-15]

## மரண அறிவித்தல்கள்

### இளையகுட்டி யோகதுரை

[ராசா]

ஊரெழு கிழக்கு, மோகன் வீதியில் வசித்த இளையகுட்டி யோகதுரை (ராசா) நேற்று நண்பகல் காலமானார்.

இவர் சி. இளையகுட்டி - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், க. சின்னத்துரை - பூரணம் தம்பதிகளின் மருமகனும் பவானியின் அன்புக்கணவரும், தர்சினி (கணேச வித்தியாசாலை, ஊரெழு) தர்சன் ஆகியோரின் அன்புத்தந்தையும், தங்கராணி, தமர்குலசிங்கம், சந்திரா, ராதா, மன்மதராசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தங்கராசா, தவராஜா, சாந்திநிதி, பாலு, ரஞ்சன், றஞ்சினி, றஜனி, (சுவிஸ்) சர்மினி, சாரதா ஆகியோரின் அன்பு மைத்துனரும், நாதன், ஜெயம் (சுவிஸ்) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [28-7-95) பிற்பகல் 1 மணிக்கு நடைபெற்று பூதவுடல் சிவங்கன் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. தர்மகுலசிங்கம்
(சகோதரர்)

[37760]

### திருமதி பரமேஸ்வரி பொன்னுத்துரை

[மரகதம்]

வேலணை கிழக்கு செல்வநாயகம் வீதியைப் பிறப்பிடமாகவும், இல. 68, கோவில் வீதி கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த K. S. P என்றழைக்கப்படும் காலஞ்சென்ற பொன்னுத்துரை அவர்களின் அன்பு மனைவி பரமேஸ்வரி நேற்றுக் காலமானார்.

இவர் வேலணை வடக்கைச் சேர்ந்த நாகலிங்கம் பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்புமகளும், வசந்தா [ஆசிரியை, சரவணை சின்னமடு றோ. க. த. க பாடசாலை], வசினா, விஜயகுமார் [சுவிஸ்] ஆகியோரின் அருமைத் தாயாரும், இராசேந்திரனின் [நயினாதீவு மாணிக்கம் ஸ்ரோர்ஸ் சின்னக்கடை] அருமை மாமியாரும், விதுசனா, சாரங்கன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் [27 - 7 - 95] நேற்று அன்னாரது இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்..

தகவல்:
இராசேந்திரன் (மருமகன்)

இல. 68, கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

[37761]

## உடுவில் கோட்ட பாடசாலைகள் இயங்கும்

வலிகாமம்தெற்கு, ஜூலை 28
உடுவில் கல்விக் கோட்டத்தில் உள்ள கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை ஆகியன தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் யாவற்றையும் வழமை போல நடத்துமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. க. இரத்தினராசா பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

மேற்குறித்த இரு பாடசாலைகளையும் ஆரம்பிப்பது பற்றி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். [ஐ-152]

## அதிபர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 28
சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த சகல பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும், (ஒ)

## வினாத்தாள்கள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி

நாளை காலை பருத்தித்துறை நோக்கிப் புறப்படும் என்றும் —

மாலையாவதற்கு முன் இக்கப்பல் பருத்தித்துறைக்கு வரும் பட்சத்தில் உடன் வினாத்தாள்கள், காகிதாதிகள் இறக்கப்படும் என்றும்—

இல்லையேல் நாளை மறுதினம் இறக்கப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

## மல்லாகம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கடும் மோதலை தொடர்ந்து படையினர் பின்வாங்கி முன்பு நிலைகொண்டிருந்த பகுதியைச் சென்றடைந்தனர். படையினர் முன்னேறிய போது தோட்டங்களில் நின்ற சிலரைப் பிடித்து வைத்திருந்தனர். புலிகள் தாக்கியபோது அவர்களைக் கைவிட்டு படையினர் தப்பிச் சென்றனர். சுமார் 100க்கும் மேற்பட்டோர் அவ்வாறு விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் விசேட இராணுவ கொமாண்டோக்களும், விசேட படைப் பிரிவினரும் நேற்று அதிகாலை மல்லாகத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைமையகம் மீது தாக்குதல் நடத்தினர் என்று இலங்கை வானொலி தெரிவித்தது.
(இ-68-3-13-15)

## வானொலி செய்தி குறித்து அரச அதிபர் ஆச்சரியம்

யாழ்ப்பாணம், ஜூலை 28
யாழ்ப்பாணத்தில் உணவுத் தட்டுப்பாடு இல்லை என தான் தெரிவித்ததாக ஸ்ரீலங்கா அரச வானொலி வெளியிட்ட செய்தி குறித்து யாழ். அரச அதிபர் க. பொன்னம்பலம் ஆச்சரியம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு இல்லை என யாழ் அரச அதிபர் தெரிவித்ததாக ஸ்ரீலங்கா வானொலி நேற்று முன்தினம் அறிவித்தது.

ஸ்ரீலங்கா அரச அதிகாரிகள் தன்னுடன் எவ்வாறு தொடர்பு கொண்டார்கள் என்பது தனக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளிப்பதாகவும் அரச அதிபர் தெரிவித்தார். (இ-3]

## பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் அமெரிக்கா வழங்கும்

நியூயோர்க், ஜூலை 28
பாகிஸ்தானுக்கு ஒரு தொகுதி ஆயுதங்களையும் இராணுவ உபகரணங்களையும் வழங்கவுள்ளதாக அமெரிக்காவின் கிளின்ரன் நிர்வாகம் அறிவித்துள்ளது.

40 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான இந்த இராணுவ உபகரணங்களில் போர் விமானங்கள், ஏவுகணைகள், நீர் மூழ்கிகள் என்பன அடங்கும்.

1990ஆம் ஆண்டு ஜோர்ஜ் புஷ் பதவியில் இருந்த சமயம் அணு ஆயுதத் திட்டத்தை கைவிடுமாறு கோரி பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை வழங்குவதை அமெரிக்கா நிறுத்தியிருந்தது. [ஐ-க]

## நெடுந்தீவு உ. அரச அதிபரின் தற்கொலையில் மர்மம்

### ஈ.பி.டி.பியினரால் கொல்லப்பட்டார்?

கொழும்பு, ஜூலை, 28
தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்பட்ட, நெடுந்தீவு உதவி அரச அதிபர் திரு பிரான்ஸிஸ் நிக்கஸின் மரணம் திட்டமிட்ட கொலை என்று தற்போது தகவல்கள் வெளிவந்துள்ளன.

இவரது மரணத்திற்கு, நெடுந்தீவில் நிலை கொண்டுள்ள ஈ. பி. டி. பி. குழுவினருக்கும் நேரடித் தொடர்பு இருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நெடுந்தீவு உதவி அரச அதிபராகப் பொறுப்பேற்ற சமயத்தில் இவர் அங்கிருந்த ஈ. பி. டி. பி. குழுவினருடன் இணக்கமாக நடந்து கொண்டபோது— பின்னர் இக்குழுவினரின் இம்சைகள் தாங்க முடியாது அவர்களுடன் முரண்பட்டிருந்தார் என்றும் கூறப்படுகிறது.

கடந்த எட்டாம் திகதி இவரை ஈ. பி. டி. பியினர் பலாத்காரமாக விசாரணைக்கென அழைத்துச் சென்றனர்.

பின்னர் அவர் தூக்குப் போட்டு இறந்து விட்டார் என்று கூறி சடலத்தை அவரது வீட்டில் கொண்டு சென்று ஒப்படைத்தனர்.

ஆனால் அவர் ஈ.பி.டி.பியினரால் அடித்துக் கொல்லப்பட்டதை பலர் நேரில் கண்டதாக அவரின் உறவினர் ஒருவர் கொழும்பு பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார். (எ)

## வடக்கு நோக்கி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கடற்படை தொடர் அணி ஒன்று வடக்கு நோக்கிச் செல்வதாக கொழும்பு இராணுவ அதிகாரியை மேற்கோள் காட்டி தூர கிழக்கு ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## வீடுகள், கட்டடங்கள்-:-

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஜெப் மோட்டோர்ஸ் பகுதியில் மட்டும் 20க்கும் மேற்பட்ட ஷெல்கள் விழுந்து வெடித்தன.

இதனால் இப்பகுதியில் உள்ள வீடுகள், கடைகள், வேக்கறி, மரக்காலை என்பன சேதமடைந்தன.

ஏராளமான குடும்பங்கள் கோப்பாய், நீர்வேலி, உரும்பராய்ப் பகுதிகளுக்கும் இடம்பெயர்ந்துள்ளன.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நேற்று மட்டும் புதிதாக 137 இடம்பெயர்ந்த குடும்பங்கள் வந்து சேர்ந்துள்ளதாக கோப்பாய் பிரதேச செயலர் தெரிவித்தார்.

அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையில் 35 குடும்பங்களும்—

நீர்வேலி கந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தில் 40 குடும்பங்களும்—

உரும்பராய் கிழக்கு ஞான வைரவர் கோயிலில் 20 குடும்பங்களும் — இதனைவிட ஏற்கனவே உள்ள முகாம்களில் 42 குடும்பங்களும் நேற்றுப் புதிதாக வந்து சேர்ந்துள்ளன.

இவர்களுக்கான சமைத்த உணவு விநியோகம் கோப்பாய் பிரதேச செயலர் மற்றும் றெட்பானா ஸ்தாபனம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.
(இ-4-13-15-68)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292 இல் உள்ள அச்சகத்தில் 28 - 07 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org